[1971 டிசம்பர் 15

செங்கற்பட்டு மாவட்டத்தில் வறட்சி நிலை

* 419 வினு—திரு. ஆ. பரந்தாமன் : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பருவமழை பொய்த்ததன் காரணமாகச் செங்கற்பட்டு மாவட்டம் முழுவதும் வறட்சி நிலை நிலவுகிறதென்பதை அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், அரசு எடுத்த துயர் தணிப்பு நடவடிக்கைகளின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் . (அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் வறட்சி நிலைமைகள் நிலவுவதாகச் சொல்ல முடியாது.

(இ) இவ்வினுவிற்கு இடமில்லை.

கிராம அலுவலர் பதவிகள்

* 420 வினு—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

20—12—1970-ம் தேதிக்கு முன் கிராம அதிகாரிகள் பதவிகளுக்குத் தேர்வு எழுதி வெற்றி பெற்றவர்களுக்கு எஸ்.எஸ்.எல்.சி. பூர்த்தி செய்திருக்க வேண்டுமென்ற விதியினின்றும் விலக்களிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. கோ. இளங்கோவன் : கிராமாதிகாரியாக விரும்பும் ஒருவர் எஸ்.எஸ்.எல்.சி. பூர்த்தி செய்திருக்க வேண்டுமென்று 20—12—1970-ல் அரசு விதித்திருப்பதாக அறிகிறேன். அதற்கு முன்னதாக அந்த விதி இல்லையென்று சொல்லப்படுகிறது. அந்த வேலை கிடைக்குமென்று கருதி சிலர் முன்னதாகவே அந்தத் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றிருக்கிறுர்கள். அவர்கள் இப்போது வேலை இல்லாது தவிக்கிறுர்கள். இந்த நிலைபற்றி அரசு பரிசிலிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தேர்வு பெற்றவர்களுக்கெல்லாம் வேலை கொடுப்பது என்பதில்லை. அரசாங்க வேலைக்கு என்ன தகுதி என்று இப்போது உத்தரவு போடப்பட்டிருக்கிறதோ அதன்படிதான் ஆட்கள் நியமிக்கப்படுவார்கள்.

உயர்நீதிமன்றத்திலுள்ள ரிட் மனுக்கள்

* 421 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உயர்நீதி மன்றத்தில் 13—7—1971-ல் ஓர் ஆண்டு முடிந்தும் முடிவு பெருமல் இருக்கும் ரிட் மனுக்கள் எவ்வளவு ?

(இ) இதைத் துரிதமாக முடிக்க அரசு மேற்கொண்டு உள்ள நடவடிக்கை என்ன ?